
திருப்பூர் மாநகராட்சி
மண்டலம் எண் : III

மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது
G1/7254/2023-23
தெ.மு.54/.....3.5.2024
அலுவலக உத்தரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையருக்காக
மண்டலம் எண் : 3
திருப்பூர் மாநகராட்சி



Document certified by Pushparaj B.
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.06.[illegible]:36:03

வே.பிரேம்குமார்
திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம் க.ச.எண்.563/2A1-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு 1:500 (1செ.மீ = 5.0மீ) (விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.17)
இணையதள விண்ணப்ப எண். 3TFOGANW

குறிப்பு :

வ

மனைப்பிரிவின் பரப்பு : 2.27 ஏக்கர் (அ) 9190.00 ச.மீ
ஒதுக்கிய மனைகள் : 26
மனைப்பிரிவின் எல்லை .....
நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை .....
மனைப்பிரிவு சாலை .....

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை):

I. மனைப்பிரிவு சாலை பரப்பு (ம) மூலை முடக்கு : 2927.605 ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு)x10%
: (9190.00 - 2927.605) x 10% = 626.24 ச.மீ

ii) 626.34 ச.மீ (10%) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகையரூ.4,27,721/-னை நாள் .26.05.2023 அன்று உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தியுள்ளார் .

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக 1%)

A) LOCALBODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9190.00 - 2927.605) x 0.5% = 31.31 ச.மீ .
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 42.535 ச.மீ (0.67%)

B) TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9190.00 - 2927.605) x 0.5% = 31.31 ச.மீ .
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 35.125 ச.மீ (0.56%)

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ -ம் விடப்படல் வேண்டும் .
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ -ம் விடப்படல் வேண்டும் .

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், LOCALBODY-ற்கான பொது உபயோக இடத்தினை உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO-ற்கான பொது உபயோக இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது .
2. அரசாணை எண் : 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் .09.12.2020-ல் மற்றும் அரசாணை எண் .141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும் .
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .
5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு விடுதலின்றி நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

SWP / DTCP / TIRUPPUR LPA / LAYOUT NO: 33/2023
PLANNING PERMISSION NO: 34/2023

உறுப்பினர் செயலர் / நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
திருப்பூர் மாவட்டம் .